## சூரியகந்த

உல்லாசப் பயணிகளின் சொர்க்க பூமி எனப் பெயரெடுத்த இலங்கை இன்று எலும்புக் கூடுகளின் தேசமாகக் காட்சி அளிக்கின்றது. ஆங்காங்கே களனிகங்கைக் கரைகளில் காணப்பட்ட எலும்புக் கூடுகளின் தொடர்ச்சியாக அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டிய பகுதியல் சூரியகந்த மலையில் பல எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவ் எலும்புக் கூடுகள் அனைத்தும் 1988 இல் ஜே.வி.பி நடவடிக்கை உச்சமாக இருந்த காலப் பகுதியில் இராணுவத்தினரால் எம்பிலிப்பிட்டி மகாவித்தியாலயத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 31 மாணவர்களின் எலும்புக்கூடுகள் என்றே அறியப்படுகிறது.



SLFP தலைமைக்கு கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் –அதன் வளர்ந்து வரும் தலைவர்– சந்திரிகா குமாரணதுங்க தலைமையிலேயே இவ் எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டன.

இவ் எலும்புக் கூடுகள் யு.என்.பி அரசின் உச்ச பாசிசத்தின் வெளிப்பாடாக இருந்த போதும், SLFP இதனை பாசிசத்திற்கு எதிரான போராட்டமாக முன்னெடுக்காமல் தேர்தல் பிரச்சாரமாகவே முன்னெடுக்க முயல்கிறது. இதன் மூலம் தன்னுடைய ஆட்சிக் காலத்தின் பாசிச செயற்பாடுகளை மூடி மறைக்கப் பார்க்கின்றது. 1971ம் ஆண்டு SLFP ஆட்சிக் காலத்தில் 10,000 க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் வெட்டப்பட்டும் சுடப்பட்டும் களனி கங்கையில் மிதக்கவிடப்பட்டார்கள் என்பதை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

மொத்தத்தில் பாசிச வெறியர்களுக்கு கட்சி, இனம், மதம் என்ற வேறுபாடு எதுவும் இருப்பதில்லை. சூரியகந்த இதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டு.

## வடக்கு கிழக்கை பிரிப்பதற்கான முன்னோடித் தேர்தல்

மீண்டும் மீண்டும் மனம் தளராத விக்கிரமன் போல அரசும் பிற்போட்டு பிற்போட்டு வந்த தேர்தலை தற்போது நடத்தியே முடிப்பது என தீர்மானித்துள்ளது. கிழக்குக்கும் வவுனியா நகரசபைக்குமான உள்ளூராட்சி தேர்தலையே அரசு இவ்வாறு நடாத்துவதென முடிவு செய்துள்ளது. அதற்கான திகதியாக மார்ச் 1ம் திகதி தீர்மானிக்கப்பட்டதுடன் வேட்பு மனுத்தாக்கல்களும் முடிவுற்றுள்ளன.

அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்களான TELO, PLOT, EPDP, EROS ஆகிய நான்கும் வரிந்து கட்டிக்கொண்டு போட்டிக்கு நிற்கின்றன. TELO இயக்கம் எல்லா இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. வவுனியா நகரசபையில் தனது கட்சியின் சின்னத்திலும் ஏனைய இடங்களில் சுயேச்சைக் குழுக்களின் பெயரிலும் போட்டியிடுகின்றது. EPDF பேரதீவுப்பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச சபைகளிலும், PLOT வவுனியா நகரசபையிலும், EROS மட்டக்களப்பு மாநகரசபையில் போட்டியிடுகின்றன. இவற்றைவிட UNP, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் என்பனவும் போட்டியிடுகின்றன.

தமிழ்க் குழுக்கள் போட்டியிடுவதற்கு கூறுகின்ற காரணமாக..... தாங்கள் போட்டியிடாவிட்டால் UNP வென்று விடும் என்றும், UNP வென்றால் வடக்கு–கிழக்கு பிரிப்பு தானாக ஏற்பட்டுவிடும் என்றும் கூறுகிறார்கள்.

இதே காரணத்தைக் கூறித்தான் முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல்களில் போட்டியிட்டது. அப்போதெல்லதம் இவர்கள் அவர்களைத் துரோகிகள் என்றனர். 1981ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலின்போது PLOT இயக்கம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் இரு பொலீஸ்காரரை சுட்டு தேர்தலைக் குலைக்க முயன்றது. அதே இயக்கம் இன்று கூட்டணி கூறிய அதே காரணத்தைக் கூறிக் கொண்டு தேர்தலில் நிற்கின்றது. ஆனால் அன்று போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று தேர்தலைப் பகிஸ்கரிக்கின்றது.

EPRLF உம் தேர்தலை பகிஸ்கரிப்பதாக கூறியுள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை இத் தேர்தல் சிதைப்பதாக இருப்பதால் தாம் தேர்தலை பகிஸ்கரிப்பதாக கூறுகின்றது. ஆனால் இதே EPRLF தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை சிதைத்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டதுமல்லாமல் பாராளுமன்ற தேர்தலிலும் போட்டியிட்டு இன்று பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கின்றது.

இவ்வாறு எலும்புத் துண்டுக்காக தமிழ்க் குழுக்கள் கடிபட்டு போராடும்போது அரசு மட்டும் தன் நோக்கத்தில் குறியாகவே உள்ளது. அது வடக்கு-கிழக்கை பிரிக்கும் வகையில் கிழக்கில் சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதற்கான முன்னோடித் தேர்தலாகவே இதனைப் பார்க்கின்றது.

இத் தேர்தல் தொடர்பில் அரசு பின்வரும் நோக்கங்களை குறியாகக் கொண்டுள்ளது.

**1.** வடக்கு-கிழக்கைப் பிரித்தல்

**2.** வடக்கு, கிழக்கு என்ற பேதத்தை உருவாக்கல்

**3.** கிழக்கில் அமைதி நிலவுகின்றது என்ற போலியான தோற்றத்தை உலகுக்கு காட்டல்.

**4.** இனப் பிரச்சனை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை தான் உண்டு என்ற கருத்தை பலப்படுத்துதல்

**5.** தேசிய இனப் போராட்டத்தை வடக்குக்கு மட்டுப்படுத்தல்

**6.** இலங்கை அரசு ஒரு ஜனநாயக அரசு என நிரூபித்தல்

உண்மையில் நுணுக்கமாகப் பார்த்தால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு எதிராக இருப்பது அரசு அல்ல, அரசின் தயவில் நிற்கும் தமிழ்க் குழுக்களே.

பாவம், தமிழ்மக்கள்! என்ன செய்வார்கள் -தங்கள் தலையில் தாங்களே அடித்துக் கொள்வதைத்தவிர! ❑

# கொடுமையின் துயரம்

உற்றதுணையெல்லாம்
அழிந்து போன துயரதனில்
உள்ளம்
நெருப்பாய் பற்றியெரிய
ஊரின் வெளிதனில்
ஒருவனாய்
நான் நடக்கிறேன்.

மேகச்சுமையழுத்த
வானம் இறங்கி
தொடுவானில் உறங்கும்

மாலைவெயில்
என்னில் பட்டு
மௌனமாய்
கணங்கள் நகரும்

காற்றில்
இலையுசுப்பும் பூவரசும்
வேலிகளில்லா
எங்கள் வீடுகளும்
வெறுமையில் கிடக்கும்

குண்டுகள் போடும்
கூக்குரலில்
காக்கைகளும் கலைந்து
இறகை வலித்து
புதிதாய்
இருப்பிடம் தேடும்

இந்த வேளையில்
என் ஊர்தனில்
கால்கள் நகர அஞ்சும்
குருதியுறையும்
நினைவுகள் குழம்பும்

என் கிராமத்து வெளிதனில்
இன்றும்
நேற்றையின்
மாலை வெயில்
ஊமையாய்க் கரையும்.

**– பி. ரவிவர்மன்**
(16.05.93)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதின் இறுதிக்காலம், எண்பதுகளின் ஆரம்பக்காலம்! தமிழ்ச் சினிமாவில் கொடிகட்டிப் பறந்த இரு பெரும் நடிகர்களின் வீழ்ச்சியும், புதியவர்களின் நுழைவும் பெரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தும் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தப் புதியவர்களின் உத்வேகத்துடன் கூடிய நுழைவு நடிப்புத் துறையில் மட்டுமல்லாமல் இசை, இயக்கம், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு என சகல துறைகளிலும் நிகழ்ந்தது. இத்தகைய திருப்பத்தை பல பத்திரிகைகளும், விமர்சகர்களும் அன்று மிகவும் வரவேற்றனர்.

தமிழ்ச் சினிமாவின் தொடக்க காலம் அப்படியொன்றும் மோசமான அல்லது தரக்குறைவுகளின் தொடக்கமல்ல. ஆயினும் அவற்றிலிருந்த மோசமான கூறுகளே படிப்படியாக வளர்ந்து மனிதர்களின் ரசனைத் தரத்தை கேலி செய்யும் விதத்திலும், மனித மூளையை அவமானப்படுத்தும் விதத்திலும் உருவாக்கப்படும் மசாலாப் படங்களுக்கு அடிகோலாயிற்று. ஆரம்ப காலங்களில் தியாகராஜ பாகவதர், சின்னப்பா போன்றவர்கள் புகழ்பெற்ற நடிகர்களாக விளங்கினார்கள்.

# தமிழ்ச் சினிமாவும் தேக்கமுற்ற ரசனையும்

அப்பொழுதெல்லாம் கீரோ, ஸ்ரார் என்ற அந்தஸ்துகள் கிடையாது. அவர்கள் நடிகர்களாகவே இருந்தார்கள். அவர்களின் புகழ் வளர வளர அவர்களுக்காகவே ரசிகர்களும் உருவாக தனிமனித சாகசங்கள், தனிமனித கவர்ச்சி போன்றவை இடம்பெறலாயின. இருப்பினும் தொடக்ககாலம் அவ்வளவு மோசமானதாக இல்லை என்று ஏன் சொல்கிறேன் என்றால், அந்நாட்களில் தமிழ்ப் படங்களின் உருவாக்கத்தையும் அதற்குள் தேசபக்தி, சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் புகுத்தப்பட்டு எப்படி வெற்றி கொள்ளப்பட்டன என்பதையும் அறிந்தால் இவை புரிந்துவிடும். என்னதான் புகழ் பெற்ற நடிகர்களை வைத்து படம் எடுத்திருந்தாலும் ரசிகர் கூட்டத்தை திரட்ட தயாரிப்பாளர்களுக்கு ஒரு என்.எஸ்.கிருஸ்ணன் தேவைப்பட்டது. ஓடாத படங்களுக்கு இவரது நகைச்சுவைக் காட்சிகளை இணைத்து ஓடவைத்த காலமும் உண்டாம். இத்தனைக்கும் இவர் சமூக சீர்திருத்தத்தைப் பிரச்சாரம் செய்த ஒரு கலைஞர்.

இப்படியாக தொடக்கத்தில் ஆரோக்கியமாகவும் பின்பு படிப்படியாக கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி இன்றுள்ள நிலமையை எட்டியது தமிழ்ச் சினிமா. இன்று குப்பைகளாக வெளிவரும் மசாலாப் புற்றீசல்களுக்கு ரசிகர்களின் ரசனைத் தரத்தை குறைகூறும் –மக்களின் மேல் பழிபோடும்– தயாரிப்பாளர்களின், இயக்குனர்களின் கூற்றில் உள்ள கபடத்தனத்தைப் புரிந்து கொள்ள தமிழ்ச் சினிமாவின் வரலாற்றை சற்று பின்னோக்கி ஆராய்ந்தால் சகலதும் புரியும்.

இன்றைய தேக்கமுற்றுவிட்ட ரசனையை உயர்த்துவதற்கான சினிமாவை உற்பத்தியாளர்களின் கைகளிலிருந்து படைப்பாளிகளின் கைகளுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் சிறு சலசலப்பாக இடையிடையே எழுவதுண்டு.ஆயினும் அவை வெற்றிபெறுவதற்குப் பதில் தோல்வியையே தழுவிக் கொண்டன. இந்த இடத்தில்தான் 70, 80 களில் புதியவர்களுக்கான வாய்ப்பு அதிகரித்தது. இதில் பலர் சினிமாவை கற்றறிந்து, புதிய பரிமாணங்களில் படைக்க முற்பட்டார்கள். இதனால் பின்னணியில் இருந்த இயக்குனன் முன்னணிக்கு வந்தான். ஒரு சினிமாவை இயக்குபவன் என்ற முறையில் பெரும் பாரமும், பொறுப்பும் அவன் தலையில் விழுந்தது. நட்சத்திர நடிகர்களின் ஆதிக்கம் குறைந்து இயக்குனர்கள் தங்களை இனம்காட்டக்கூடிய சந்தர்ப்பம் வாய்த்தது. எனினும் இதனை எத்தனை பேர் சரியாக பயன்படுத்தினார்கள் என்பது கேள்விக்குறியே! இப்படியாக இடையில் நல்லதொரு வாய்ப்பிருந்தும் அதைப் பயன்படுத்தி வெற்றிபெற முடியாமைக்கான காரணங்கள் பல. அவற்றை வேறு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

தொடர்ந்து ஒரே விதமான சினிமாப் பாணியே கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், அறிவுத்துறையின் வளர்ச்சி, விமர்சனத்துறையின் வளர்ச்சி, இடையிடையே நல்ல படைப்புக்களின் வருகை, அந்நிய மாநிலங்கள் மற்றும் உலகளவில் நல்ல படங்களுக்கும் இயக்குனர்களுக்கும் இருந்த மதிப்பு போன்ற காரணங்களால் தமிழ்ச் சினிமா உலகிலும் தரமான ரசனையுள்ளம் படைத்தவர்களும், நுண்ணிய ஆழமான கலையுணர்வு கொண்டவர்களுமான ஒரு கூட்டமும் தோன்றாமலில்லை. இத்தகைய ரசிகர் மட்டம் என்பது தன்னியல்பாக எழுந்து வந்த ஒன்றல்ல. இத்தகையவர்களின் தேடலும், ரசனையுணர்வும் வேறுபட்ட உலகமாகவே உள்ளது. இவர்களின் கலைப்பசிக்கு தீனி குறைவு. தங்களின் பசியைத் தீர்க்க, நல்ல படங்கள் ஏதாவது வாராதா? என்ற நப்பாசையில் மசாலாப் படங்களினூடே அவற்றைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு நரகலிலே நல்லரிசி தேடும் முயற்சிதான் என்றாலும் இடையிடையே நல்லரிசியும் கிடைத்துவிடுகிறது. அப்படி எனக்கு அண்மையில் கிடைத்ததுதான் **உச்சிவெயில்** .

உச்சிவெயிலைப் பற்றிக் கூறுவதற்கு முன்பு நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசாலாப் படங்களினூடே நடாத்தும் தேடலின் பக்கவிளைவாய் நமக்கு இருக்கும் ரசனையுணர்வு எவ்வாறு பாதிப்படைகிறது என்பதையும், உச்சிவெயில் போன்ற படங்களையும், அதன் இயக்குனர்களுக்கு நேர்ந்த கதியையும் பார்ப்போம். அத்துடன், தரமான சினிமா மாற்று என்பது ஒரு இயக்கமாகவே முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் பார்ப்போம்.

**ராகவன்**

இன்று எம்முன் வந்து குவிந்து கொண்டிருக்கும் சினிமாக்கள் பற்றி மாறுபட்ட படைப்புகள் என்றும், புதுமையைப் புகுத்தியிருக்கிறேன் என்றும் அதன் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் கூறுகின்ற மாறுபட்ட, வித்தியாசமான, புதுமையான என்பதற்கெல்லாம் அர்த்தத்தைத் தேடுவோமாயின் அது அர்த்தமற்றதாகிவிடும். ஒரு இயக்குனர் நூறு குதிரைகளை வைத்து பாடல் காட்சி எடுத்திருந்தால் தான் ஐநூறு வைத்து புதுமை செய்தேன் என்பார். இவர்களின் புதுமையும், புரட்சியும் புளித்துப்போன ஒன்று. ஆயினும் இங்கு ஒரு கேள்வி எழலாம்.தமிழ்ச் சினிமாவில் இவ்வளவு காலத்திலும் மாறுதலே ஏற்படவில்லையா? என்பதே அது. ஓரளவு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையே. ஆனால் எதில்? தொழில்நுட்பத் துறையிலும், இசைத் துறையிலும், ஒளிப்பதிவுத் துறையிலும், இயக்கும் தன்மையிலும் மாறுதல்கள் தென்படுகின்றன என்பது உண்மையே. ஆனால் இவற்றை உண்மையில் ஆரோக்கியமான மாறுதலாகக் கொள்ள முடியுமா? அப்படியாயின் இவை உருவத்திலும், உள்ளடக்கத்திலும் எத்தகைய மாறுதல்களைக் கொண்டு வந்தன, அதன் வழியே ரசிகரின் ரசனைத் தரத்தில் எத்தகைய மாறுதல்களைக் கொண்டு வந்தன போன்ற கேள்விகள் எழுகின்றன. மேற்குறிப்பிட்ட மாறுதல்களும் அவை மாறுதல்களாக மட்டும் இல்லாமல் பல தீமைகளையும் கொண்டு வந்தன.

மிகப் பிரமாண்டமான படங்கள், மிக விலையுயர்ந்த நடிகர்கள், அதிக விலை கொண்ட இசைஞானிகள், மிக வலுவுள்ள தயாரிப்பாளர்கள்... இவர்களின் ஆதிக்கம் மேலும் வளர்ந்து இறுகி இருக்கிறது. நல்ல நோக்கமும் உண்மையிலேயே புதுமையைக் காணத் துடிக்கும் படைப்பாளிகளுக்கு மேலும் மேலும் எட்டாத உலகமாகவே சினிமா தள்ளி வருகிறது. இதனால் எப்போதாவது அரிதாகவே நல்ல படங்கள் -பல போராட்டத்தின் மத்தியில்- வெளிவருகின்றன. அத்தகைய படங்கள் மனித வாழ்வின் யதார்த்தத்தை, உணர்வுகளின் நுண்ணிய வெளிப்பாட்டை, ஆழமான ரசனையுணர்வுடன் -குறைபாடுகளையுடைய கலை வெளிப்பாட்டுடன்- முன்வைக்கின்றன. இங்குதான் பிரச்சனையே எழுகின்றது. பிரமாண்டமான, வேகமான படங்களுக்கு மாற்றாக வைக்கப்படும் இத்தகைய படங்கள் அதன் எதிர்நிலையில் செல்வதால் அவை தோல்வியுற அதுவும் ஒருவகையில் காரணமாகிறது. அத்துடன் பிரமாண்டமான, வேகமான படங்களில் மூழ்கிவிடும் அல்லது அதனூடே தேடமுனையும் ரசிகர்கள் கூட இத்தகைய நல்ல படங்களை ரசிக்கும் தன்மையை இழந்து விடுகின்றனர். இத்தகைய பழைய பாணி மசாலாப் படங்களையும், பிரமாண்டமான படங்களையும் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்ட தரமான ரசிகன் கூட ஆழமான, நுணுக்கமான வெளிப்பாடுகளையுடைய படங்களை பார்ப்பதற்கான ஆழ்ந்த ரசனை உணர்வையும் சகிப்புத் தன்மையையும் இழந்து வருகிறான். இத்தகைய உணர்வுத் தன்மையையும், ரசனைத் தரத்தையும் தக்கவைத்துக் கொள்வது அல்லது வளர்த்துக்கொள்வது என்பது தொடர்ந்த தேடலிலும், போராட்டத்திலுமே சாத்தியப்படுகிறது.


எழுபதுகளில், எண்பதுகளின் ஆரம்பத்தில் வந்த இயக்குனர்களில் நல்ல படைப்புகளை படைக்க முற்பட்டவர்களில் எளிமையானவர்கள் இந்த பிரமாண்டங்களின் முன் அழிந்து போனார்கள்., அல்லது ஒதுக்கப்பட்டார்கள், மற்றும் சிலர் வர்த்தகக் கலையோடு கலந்து போனார்கள். இன்னும் சிலரோ சமரசம் செய்து குற்றுயிராய் வாழ்கிறார்கள். ஒதுக்கப்பட்டவர்கள் மீண்டும் தமது கொள்கைப் பிடிப்புடன் நீண்ட இடைவெளிக்குப் பிறகாவது ஒன்றை வெளிக்கொண்டுவர போராடுகிறார்கள். இதுகுறித்து இயக்குனர் மகேந்திரன் குறிப்பிடும் பொழுது "நான் குறிஞ்சி மலராகவே இருக்க விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு நீண்ட நாட்களின் பின் வெளிவந்த குறிஞ்சிப் பூ தான் **உச்சி வெய்யில்**. இதன் இயக்குனர் ஜெயபாரதி. 1979 இல் குடிசை படத்தைத் தந்தவர். ராபேட் ராஜசேகரன், மனோபாலா போன்ற கலைஞர்களுடன் சேர்ந்து குடிசையை குடிசையாகவே எடுத்தவர். கமலா காமேஷ் என்கிற நடிகையை தமிழுக்குத் தந்தவர். இவர் பின்னாளில் அம்மா பாத்திரங்களுக்கு அழுது வடிக்கவே பயன்படுத்தப்பட்டார். பொதுவாகவே ஜெயபாரதியின் படங்களில் கலைத்துவ வெளிப்பாடு குறைவு என்று விமர்சிப்போரும் உள்ளர். இத்தகைய குற்றச்சாட்டுக்கு ஆளான மற்றொரு இயக்குனர் ருத்திரையா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விமர்சனம் :**

# ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையும் அதன் 'மீடியாவும்" *(Media)*




இலத்திரோன் கருவிகளுக்கான தடை! பற்றறிகளை எடுத்துச் செல்ல அனுமதி மறுப்பு!. மின்சாரம் –அது முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலை! மண்ணெண்ணை துளியளவுதான்! சவர்க்காரப் பாவனையை மறந்த மக்கள்! உண்பதற்கு.... உணவு போதியளவு இல்லை! பிணிகளைத் தீர்க்க மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு! ஆம்! பொருளாதாரத் தடைகளுக்குட்பட்ட ஒரு இருண்ட பிரதேசம்.

அந்த இருண்ட பிரதேசத்தில் இருந்து வெளிவரும் ஒரு வீடீயோ சஞ்சிகை பற்றிப் பேசாமல் இருந்து விட முடியாது. செழுமைப்பட்ட ஒளிப்பதிவு, தேவையுடன் கூடிய இசை, நிகழ்ச்சிகளை பாகம் பாகமாகப் பிரித்திருக்கும் முறை, திறன்!

ஐரோப்பிய நாடுகளில் 'வாங்கும் திறனை' மட்டும் தமது தகுதியாக்கிக் கொண்டு திருமண வைபவங்கள், சாமத்தியச் சடங்குகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், (இன்று சில பொது நிகழ்சிகளுக்கும்) என்று வீடீயோ கமராக்களையும், மிக்சர் (video mixer) களையும் காவிச் சென்று, காதுகளில் சில கருவிகளையும் மாட்டிக்கொண்டு, படப்பிடிப்பில் ஈடுபடுகின்ற தமிழர்களில் பலர் ஒளிப்பதிவு பற்றிப் படிப்பினை பெற வேண்டிய பல நேர்த்தியான தொழில் நுணுக்கங்களை உள்ளடக்கியது தான் இந்த 'ஒளிவீச்சு' வீடீயோ மாத இதழ். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருகின்ற இதன் முகவரி "ஒளிவீச்சு, நிதர்சனம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், தமிழ் ஈழம்." என்றுதான் சுட்டப்பட்டிருக்கிறது. *1993* மே, யூன், யூலை, மாத இதழ்களே இதுவரை எனது பார்வைக்கு கிட்டியிருக்கிறது.

செய்திச் சரம், மாவீரர் நினைவு, மண்ணும் மக்களும், புதிய வெளியீடுகள், மருத்துவம், விளையாட்டு, விவரணம், பொருண்மிய மேம்பாடு போன்ற பல அம்சங்கள் இதனுள் அடக்கம்.

மாவீரர் நினைவில் அந்தந்த மாதங்களில் இடம்பெறும் இராணுவத் தாக்குதல்களில் வீரச்சாவு எய்துபவர்கள் நினைவு கூரப்படுகின்றனர்.

புதிய வெளியீடுகளில் தமிழ் ஈழத்தில் இருந்து அந்தந்த மாதங்களில் வெளிவருகின்ற வீடியோ (இது எங்கள் தேசம், தாயகக்கனவு போன்ற) படங்கள், சில கவிதை நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளும் குறிப்பிடப்படுகின்றன. இதில் திருமதி அடெல் பாலசிங்கம் எழுதிய Women fighters of Liberation Tigers என்ற நூல் குறிப்பிடத் தக்கதாகும்.

மருத்துவம், சிறுவர்களுக்கான போசாக்கின்மை, புதிதாகத் தோன்றும் நோய்கள், மருத்துவ வசதியின்மை போன்ற அம்சங்களையும், விவரணம், புலிகளின் குறிப்பான சில இராணுவத் தாக்குதல்களின் நேரடிப் படப்பிடிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது.

பொருண்மிய மேம்பாடு சில புதிய கண்டுபிடிப்புக்களை (ஆக்கி வாயுவில் இயந்திரங்களை இயங்க வைப்பது போன்ற) வெளிக்காட்டுகிறது.

ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை முழுமையாக விடுதலைப் புலிகளின் குரலாகவே ஒலிக்கின்ற போதும், அதற்கான பிரச்சாரத்தன்மை கலைத்துவத்துடன் குழைந்திருப்பதனாலும், தாய் மண்ணின் அவலங்களைப் பிரதிபலிப்பதனாலும் புலிகளின் பிரச்சார ஏடு என்ற முத்திரையில் இருந்து தப்பிவிடுகிறது. ஆனால் மறு புறத்தில் ஸ்ரீலங்கா அரசுக்குப் புறம்புபட்டுக் காணப்படுகின்ற ஒரு பிரதேசத்தில், புலிகளின் அரசதிகாரத்தின் கீழ் இயங்கக் கூடிய ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் பிரதிநிதியாக இது தென்படுவதை இலகுவாகக் கண்டுகொள்ளலாம்.

இவ்விதம் நோக்கும் போது இன்னொரு கேள்வியும் இயல்பாக எழ நியாயம் உண்டு. இதன் மே மாத இதழில் யாழ்குடாநாட்டில் நிகழ்ந்த மேதின ஊர்வலம் ஒன்றில் "வருத்தாதே! வருத்தாதே! உழைக்கும் மக்களை வருத்தாதே!" என்ற விதமாக தொனிக்கின்ற கோஷங்கள் எந்த அரசை நோக்கிக் கேட்கப்படுகிறது என்பதுதான், ஸ்ரீலங்கா அரசையா? அல்லது புலிகளின் அரசையா?.

இதன் கலைத்துவத்தை நோக்குவோமாயின், தாய் மண்ணின் கலைஞர்கள் பலரின் திறனையும்,

↗ 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் 4வது இடத்தை ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்கு வழங்கியிருப்பதாக தேசியக் கட்சியின் தலைவரான இன்றைய அதிபர் கிளார்க் அதிர்ச்சி தெரிவித்துள்ளார். மண்டேலாவால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் 27–50 பேர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் முன்னுரிமையுடைய வேட்பாளர்களில் 13 பேருக்கு குறையாது கம்யூனிஸ்ட்டுக்கள் உள்ளார்கள் எனவும் குற்றம் சாட்டியுளன்ளார்.

கறுப்பின மக்களுக்கு சுதந்திரம் வழங்க முனைகின்ற போது அவர்களோ சிவப்பு சிந்தனை கொண்டவர்களாக இருக்கின்றார்கள் எனவும் கம்யூனிஸ்ட் கட்சி தனது சொந்தப் பெயரில் போட்டியிடாது ANC யின் நிழலில் நின்று மறைமுகமாக போட்டியிடுகின்றதெனவும் தென்னாபிரிக்காவின் அண்டைய நாடுகளான நமீபியாவைத் தவிர அங்கோலா, மொசாம்பிக், சிம்பாபே போன்ற நாடுகளில் இன்னமும் மார்க்சிச சிந்தனையின் தாக்கம் நிகழ்ந்து கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டி வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் தென்னாபிரிக்க அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

கறுப்பின மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் தலைமைப் பாத்திரம் வகிக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாபெரும் மக்கள் இயக்கம் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இன்றைய சாதகமான நிலைமைக்கு வருவதற்கான போராட்டத்தில் மண்டேலாவுக்கு எவ்வளவு பங்கு உண்டோ அதுபோல் ஒலிவர் தம்போ போன்றவர்களுக்கு –மண்டேலா சிறைசென்ற பின்னர் கட்சி தடைசெய்யப்பட்ட சூழ்நிலையில் நிறவெறிக்கு எதிராக சமரசமின்றி போராடி வந்ததில்– குறிப்பான பங்குண்டு.

பிற்காலத்தில் மண்டேலாவின் மனைவியின் நடவடிக்கைகள் கட்சியில் ஆதிக்கம் செலுத்தியமை, அது சம்பந்தமாக கட்சியில் எழுந்த முரண்பாடுகள், மண்டேலா மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்றமை, அதன்பின்னும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் பெண்கள் அணிக்கு அவரே (வினி) தலைமை வகிப்பது போன்றவை மண்டேலாவிற்குப் பின் கட்சியின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்ற கேள்விகள் கட்சிக்குள் தீர்க்கப்படாத பிரச்சனையாகவே உள்ளது. இது எதிர்காலத்தில் எழக்கூடிய அதிகாரப் போட்டியில் கட்சி பிளவுபடக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

அடுத்து நோபல் பரிசு விடயத்துக்கு வருவோம். தென்னாபிரிக்காவில் நிறவெறி அரசியல் கொள்கையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக உழைத்தவர்களுக்கு 3வது தடவையாக உலகசமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10.12.1993 அன்று 93ம் ஆண்டுக்கான நோபல் பரிசை நெல்சன் மண்டேலாவும், வில்லியம் கிளார்க்கும் பெற்றுக் கொண்டனர். தென்னாபிரிக்க நிறவெறி அரசியலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக போராடியமைக்காக முதலாவது நோபல் பரிசு 1960ம் ஆண்டு அன்றைய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவராக இருந்த Albert Luthuli க்கும் 1984ம் ஆண்டு கறுப்பின கத்தோலிக்க பாதிரியராக இருந்த Desmond Tutu க்கும் வழங்கப்பட்டது.

ஆனால் இம்முறை மண்டேலாவுக்கும் கிளார்க்கும் வழங்கப்பட்டமை மிகவும் சர்ச்சைக்குள்ளாகியது. மண்டேலாவையும் கிளார்க்கையும் ஒரே வரிசையில் வைப்பதில் பல நாடுகள் உடன்படவில்லை. அதைவிட ஒவ்வொரு வருடமும் சமாதானத்திற்கான பரிசு பெறுபவர்கள் பட்டியலில் மண்டேலாவின் பெயர் பிரேரிக்கப்பட்டு வந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளன. நோபல் பரிசு கமிட்டி இதற்கு பின்வருமாறு விளக்கமளித்துள்ளது. "மண்டேலாவின் பங்கு மிகையானது என்பது சரியானது. அதேநேரம் கறுப்பின மக்களை ஆபிரிக்க அரசியலில் பங்கு கொள்வதற்கான ஜனநாயக பொதுத் தேர்தலை நடத்த முன்வந்தமை நிறவெறிக் கொள்கையில் ஏற்பட்ட பாரிய மாற்றம் என்பதால் அதற்காக கிளார்க்கும் கௌரவிக்கப்பட வேண்டியவர்." என்பதாக இருந்தது.

இதிலிருந்து எதிர்கால தென்னாபிரிக்காவை முதாலாளித்து சக்திகள் எவ்வாறு கையாளப் போகின்றன என்ற பெரிய கேள்வி எழுகின்றது. அதன் அடிப்படையிலேயே அமையப்போகும் தென்னாபிரிக்க அரசியலுக்கு தலைமை வகிப்பவர் யார் என்ற கேள்விக்கான விடையும் தங்கியுள்ளது.

இவ்வாறாக இன்று பேச்சளவிலும் எழுத்துக்களிலும் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் ஏப்ரல் 27ம் திகதி தேர்தலுக்குப் பின் நடைமுறைக்கு வரவுள்ளது. இதன் பின்னரே இம் மாற்றங்களின் உண்மையான தாற்பரியத்தை கண்டு கொள்ள முடியும். அப்போது தான் தென்னாபிரிக்க மக்களை இவ்வளவு கொடுரமாக அடக்கி ஆண்ட வெள்ளை அரசு இவ்வளவு விட்டுக் கொடுப்புக்களுடன் கறுப்பின மக்களை சமமாக மதித்து நடக்க இவ்வளவு இலகுவில் சம்மதித்து விட்டதா, என நெருடிக் கொண்டிருக்கும் கேள்விக்கும் சரியான விடை கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 களின் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட சுதந்திர வர்த்தக வலயம் ஏற்றுமதியை இலக்காக வைத்து பொருட்களை உற்பத்தி செய்யும் தனது பணியைத் தொடங்கியது. இதன் மூலம் கணிசமான வேலை வாய்ப்பு ஏற்பட்டது. 1989ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 60,000 க்கும் மேற்பட்டோர் அங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இலங்கை, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்வான், கொரியா, கொங்கொங் போன்ற நாடுகளில் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொழிற்துறையில் மலிவான கூலி உழைப்பை பயன்படுத்தும் நோக்கில் பெண் தொழிலாளர்களின் உழைப்பை பயன்படுத்தும் முறையே இங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் உருவாக்கப்பட்ட பால் சமநிலையற்ற தன்மை சமூக அளவிலும் கலாச்சார அளவிலும் பாரிய தாக்கத்தையும் சீர்கேடுகளையும் விளைவாக்கியது. மொத்த தொழிலாளரில் 87 வீதமான தொழிலாளர்கள் 18–25 வயதுக்குட்பட்ட திருமணமாகாத இளம் பெண்களாக இருந்ததை 1989 இல் எடுத்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

இவர்களில் அனேகமானவர்கள் மிகவும் தூரத்திலுள்ள கிராம புறங்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் படிப்பறிவு குறைந்தவர்கள்.



இவ்விளம் பெண்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே (700–1000 ரூபா வரையே) வழங்கப்படுகின்றன. இவ் உழைப்பாளர்களுக்கு தங்கள் செலவுகள் போக மிஞ்சுவது மிகக் குறைந்த தொகையே. இவர்கள் விடுதி வாடகைப் பணமாக 100–125 ரூபா வரை செலவிடுகிறார்கள். ஆனால் விடுதிகளின் வசதிகளின்மையோ சொல்லிலடங்கா.

மனித வாழ்விற்கு அத்தியாவசியமான காற்றோட்டம், வெளிச்சம், மலசலகூடம் போன்ற அடிப்படைத் தேவைகள் குறைந்தபட்சம் கூட பெரும்பாலான விடுதிகளில் கிடைப்பதில்லை. சுமார் 1000 விடுதிகளில் 565 விடுதிகள் மிகவும் குறைந்த வசதியுடனேயே காணப்படுகிறது. "போடிங்கவுஸ" ஒன்றில் 5–200 பேர் வரையும் அடக்கப்படுகின்றனர். 30–40 பேருக்கு ஒரு சமையலறையும் 10 அடுப்புமே வழங்கப்படுகின்றன. சுதந்திர வர்த்தக வலயத்திற்கு அருகிலுள்ள வீட்டு சொந்தக்காரர்கள் பலர் தங்களது வீடுகளை வாடகைக்கு கொடுத்துள்ளனர். 5–10 பேர்களை அடக்கும் வீடுகள் கூட 100க்கும் மேற்பட்ட இளம் பெண் உழைப்பாளர்களின் விடுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. பல சந்தர்ப்பங்களிலும் ஒரு அறைக்குள் 10 பேர்வரை கூட அடக்கப்படுகிறார்கள்.

## வாழ்வைக் கொன்று வளம் தேடும் வலயம்

இந்தக் "கூட்டு வாழ்க்கை முறை" எந்தவித கூச்சமுமின்றி பலபேர் முன்னிலையிலும் தமது ஆடைகளை அவிழ்த்துப்போட்டு உடை மாற்றும் நிலைக்கு அவர்களை பழக்கப்படுத்தியுள்ளது. இந் நிலைமை கலாச்சார மட்டத்தில் ஒரு எடுத்துக்காட்டாகும். அத்தோடு சுகாதார ரீதியில் கேடு விளைவிக்கும் ஒரு 'இளம் சேரிப்புறமாக' இவ் விடுதிகளும் அதை அண்டியுள்ள சுற்றாடலும் மாற்றப்பட்டு விட்டது. துவைக்காத துணிகளும் வியர்வை மணம் வீசும் செருப்புகளும் அவர்களுக்கு சாதாரணமானவை.

விடுதியில் வசிக்கும் பெண்கள் உணவுக்காக மாதம் 500 ரூபா அளவில் செலவிடுகின்றனர். ஆனால் சாப்பிடும் உணவில் ஊட்டச்சத்து மிகவும் குறைவானதே. அங்கு வசிக்கும் ஒரு பெண்ணின் சராசரி உணவு 50 கிராம் நிறையுள்ள சோறும் 15 கிராம் நிறையுள்ள மரக்கறியும் நெத்தலியுமாகும். 37 வீதமானோர் தங்கள் உணவுகளை குழுக்களாக அல்லது தனியாக சமைக்கிறார்கள். 21 வீதமானோர் வெளியில் தனியாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். அனேக தொழிலாளர்களைப் பொறுத்தவரை சமைக்கப்பட்ட உணவைப் பெறுவது மிகவும் கடினமான ஒன்று.

அங்கு வேலை செய்யும் பெண்களுக்கு மிகவும் தலையிடியானவர்கள் பெண் மேற்பார்வையாளர்களே. இவர்களின் தொல்லைகள் பல. இவர்களால் பெண் தொழிலாளர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இலக்குகளை அடைவதற்கான படிக்கற்களாக -ஆரம்பமாக- இதனை பயன்படுத்த முடியும்.

***? மலையகத்தில் தங்கள் அமைப்பின் நடவடிக்கைகள் ஒரு இனக் கலவரத்துக்கு தூபமிடலாம் என்ற கருத்து சிலரால் முன்வைக்கப் படுகின்றது. இதுபற்றி உங்களுடைய அபிப்பிராயம் யாது?***

**0** தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கேட்பது கூட இப்போது இனவாதமாகத்தான் காட்டப்படுகிறது. மலையக மக்கள் தம் இனத்தவருக்கு தமது வாக்குகளை அளிப்பதும் இனவாதமாகத்தான் பார்க்கப்படுகிறது. தொண்டமானை அரசின் நீண்டகால விசுவாசியாக மதிக்காமல் தமிழனாக அருவருப்போடு அலட்சியம் செய்ய முற்பட்டதுதான் இன்று சில அரசியல் திருப்பங்களுக்கு காரணமாகிக் கொண்டிருக்கின்றன.

இந் நிலையில் தமிழர்கள் அத்தனை பேரும் வாயே திறக்காமல் இருந்து விட்டால் மட்டும் இனவாதம் இல்லாமலா போய்விடப் போகிறது.? இதையெல்லாம் அர்த்தமற்ற புலம்பலாகவே நினைக்கிறேன். இதற்காக நாம் அஞ்சி பதுங்கி கொண்டிருப்பது கோழைத்தனம் மட்டுமல்ல தற்கொலைக்கு ஒப்பான முட்டாள்தனமுமாகும். அதேநேரம் எமது அரசியல் வேலைகளுக்கு சமமாக எங்களது கோரிக்கைகளின் நியாயங்களை அனைத்து தேசிய கட்சிகளிடமும் புரிய வைக்கும் பணியையும் முடிந்தளவு செய்து வருகின்றோம். "இனவாதத்திற்கு பதிலடி இன்னொரு இனவாதம்' என்பது எமது நோக்கமல்ல, என்பதை நிரூபிக்கும் வகையில் எமது அரசியல் பணிகள் அமைய வேண்டும் என்பதிலும் கவனமாக இருக்கின்றோம்.

***? ஏனைய அரசியல் கட்சிகளைப் போல தங்களுடைய அமைப்பும் பாராளுமன்ற முறையிலேயே அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளது போலத் தெரிகின்றது. பாராளுமன்ற முறையினால் மலையக மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு விடலாம் எனக் கருதுகிறீர்களா?***

**0** பாராளுமன்றத்தைப் பற்றிய எங்களது கண்ணோட்டம் தெளிவானது.

பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தால் மட்டும் எல்லாவற்றையும் சாதித்து விட முடியுமென்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சனை 1983 க்கு முன்னரே தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும் செயற்படும் வாய்ப்பு அமைந்த போது அந்த பதவியையும் அதற்கான அதிகாரங்களையும் அவர்கள் குற்றம் சொல்ல முடியாத அளவுக்கு பயன்படுத்தினார்கள். ஜனநாயக ரீதியிலான பாராளுமன்ற செயற்பாட்டின் உச்சக் கட்ட போராட்டத்துக்கு அவர்களின் நடவடிக்கைகள் உதாரணங்களாக அமைந்தன.

வடக்கு கிழக்கு மக்களின் ஏகோபித்த அங்கீகாரத்தையும் பூரண ஆதரவையும் அவர்கள் கொண்டிருந்தனர். ஆனால் இறுதியில் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை துறந்து விட்டு வெளியேற நேரிட்டது.

இந்த நிகழ்வுகளை முன்னுதாரண படிப்பினையாகக் கொண்டே மாகாண சபையையும் பார்க்கின்றோம்.

உலகின் பல உரிமை போராட்டங்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே நடந்ததைத்தான் வீரம் செறிந்த வரலாறுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் எமது கருத்தை தெளிவாக வெளிச்சம் போட்டுக் காட்ட இதுபோன்ற வாய்ப்புக்கள் உதவும் என நம்புகின்றோம். எமது கோரிக்கைக்கு மக்கள் மத்தியில் பெருகிவரும் செல்வாக்கை தேர்தல்களின் மூலம்தான் நாம் நிரூபித்தாக வேண்டியுள்ளது.

அத்தோடு தேர்தலினால் எம்மை வந்தடையும் பதவிகளை எமது அரசியலுக்கான மேலதிக பலமாக நினைக்கிறோமே தவிர இதுதான் எமது நோக்கமோ அரசியல் அடித்தளமோ ஆகிவிடாது.

***? இ. தொ. கா விற்கும் அரசுக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சனைகள், இ. தொ. கா விற்குள் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் என்பன பற்றி தங்களின் கருத்து யாது. ?***

**0** இ.தொகா வுக்கும் அரசுக்கும் இடையிலே எந்த பிரச்சனையும் உருவாகி விட்டதாக நான் கருதவில்லை.

இதனை ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க திரு தொண்டமானுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஏற்பட்டுள்ள மதிப்பிறக்கமே காரணமென்பதை தொண்டமானே வெவ்வேறு வார்த்தைகளால் கூறிவருகின்றார்.

இருவருக்கும் சமரசம் ஏற்பட்டு விட்டால் அல்லது வேறொரு தலைமை அதிகாரத்துக்கு வந்து விட்டால் அரசு மேல் சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்கள் எல்லாம் காற்றில் பறந்து விடும். இதைத்தான் தொண்டமானின் கூற்றுக்களும் வெளிப்படுத்துகின்றன.

எனவே இது "பங்காளி" சண்டையே தவிர கொள்கைப் பிரச்சனையல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை ஐ.தே.க வுடன் இணைந்திருக்கவே முடியாத நிலை ஏற்பட்டு விட்டால் கூட அடுத்த கட்சியுடன் "என்ன அந்தஸ்து கொடுப்பாய்" என்பது தான் உடன்படிக்கையாய் இருக்குமே தவிர "என்ன உரிமை மக்களுக்கு கொடுப்பாய்" என்பது பேச்சாக இருக்காது.

இதேபோல இ.தொ.கா விற்குள் ஏற்பட்டுள்ள மோதல்களுக்குக் காரணம் அரசாங்கத்தில் கிடைக்கின்ற அரசியல் அந்தஸ்தையும் கட்சியில் இருக்கின்ற அதிகார செல்வாக்கையும் இழந்து விடக் கூடாதே என்ற பரிதவிப்பின் வெளிப்பாடு மட்டும்தான்.

இதில் கொள்கையோ அரசியலோ இருப்பதாகத் தெரியவில்லை.

***? இ. தொ. கா விற்கும் அரசுக்கும் இடையிலான பிரச்சனையில் தங்களுடைய ஆதரவையும் தொண்டமான் கோரியுள்ளதாக ஒரு கதை அடிபடுகின்றது. இது எவ்வளவு உண்மையானது?***

**0** இது கதைதான். உண்மையில்லை. அப்படியெதுவும் நடந்தால் கூட இ.தொ.கா வுக்கு நாமும் ஆதரவு அளிக்கக் கூடியளவுக்கு அங்கே என்ன மாற்றம் நடந்து விட்டது.? அல்லது அவர்களின் போக்கில் புது நம்பிக்கை ஏற்படும் விதத்தில் வேறென்ன அங்கே ஏற்பட்டுவிட்டது?

அரசுக்கும் திரு.தொண்டமானுக்கும் இடையிலான உறவில் முறுகல் நிலை ஏற்பட்டதன் பின் தொண்டமானின் சரணாகதித்தனம் தான் ஊர்ஜிதமாகியுள்ளது. அவரது பலவீனங்களை ஒவ்வொன்றாய் அடையாளம் காணும் சந்தர்ப்பம் தான் அதிகமாயுள்ளது.

***? மலையகத்தில் மலையக மக்களின் தனித்துவத்தைச் சிதைக்கும் வகையில் அரசு குடியேற்ற முயற்சிகளை செய்து வருவதாக அறிகின்றோம். அதுபற்றி விபரங்களை கூற முடியுமா?***

**0** இதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நான் தடுப்புக் காவலில் இருந்து கொண்டிருப்பதால் இது தொடர்பான புள்ளி விபரங்களோடு விளக்கமளிக்க எந்த ஆவணங்களும் எனது கைவசம் இல்லை.

ஆயினும் மலையகப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் புதுப்புதுக் குடியேற்றங்கள் பரவலாக ஏற்படுத்தப் பட்டிருப்பதையும் நூற்றுக்கணக்கான தேயிலைத் தோட்டங்களில் இருந்து தொழிலாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டு அங்கெல்லாம் கொலனிகள் ஏற்படுத்தப் பட்டிருப்பதையும் உதாரணம் சொல்லி விளக்க வேண்டியதில்லை.

இந்த உண்மையை ஒவ்வொரு மலையகத்தவனும் தனது வசிப்பிடத்தின் பக்கத்திலேயே அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

இது நடந்த கதை மட்டுமல்ல, தொடருகின்ற கதை.

மலையக மக்கள் ஒரு காலத்தில் செறிவாக வாழ்ந்த பல பிரதேசங்கள் இன்று அவர்கள் வாழ்ந்ததற்கான சுவடுகள் கூட இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு உள்ளூராட்சி நிர்வாக அமைப்புக்களிலும் மலையகத் தமிழர்களின் எண்ணிக்கையை குறைக்கின்ற சதி திட்டமிட்டு மேற்கொள்ளப் படுகின்றன. புதிதாக எல்லைகளை மாற்றியமைப்பது, சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களை தமிழர்கள் செறிவாக வாழும் நிர்வாகப் பிரிவுக்குள் இணைப்பது, தமிழ் வாக்காளரின் எண்ணிக்கையை குறைப்பது, இவைகளோடு புதுப்புது குடியேற்றங்களை ஏற்படுத்துவதும் அமைதியாக –தடையின்றி– நடந்து கொண்டிருக்கின்றன.

***? மலையகத்துக்கு வெளியே வாழும் இந்திய வம்சாவளி மக்கள், வடக்குகிழக்கில் வாழும் இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பாக என்ன தீர்வுகளை முன்வைக்கலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?***

**0** இலங்கையில் எல்லா இனமும் –அவர்கள் எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும்– தங்களின் தனித்துவத்தைப் பேணக்கூடியளவுக்கு பாரபட்சமற்ற ஆட்சி முறையையே நாம் வலியுறுத்துகின்றோம்.

இவ்வகையில் மலையகத்துக்கு வெளியே சிதறி வாழும் மலையகத் தமிழர்களின் சுதந்திரமும் உரிமையும் மதிக்கப்பட வேண்டுமென்பதில் அக்கறையோடு கவனம் செலுத்துவதை எமது கடமையாகக் கருதுகின்றோம்.

அதேநேரம் மலையகத்தை இம் மக்கள் தமது சொந்த மண்ணாக மதித்து, அம் மண்ணில் தமது சமூகத்தின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் பிரச்சாரம் செய்வோம்.

சி.ஐ.டி மினரின் கட்டுப்பாட்டின்கீழ் 4ம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுடனான இந் நேர்காணல் மனிதம் வாசகர் ஒருவரினால் மேற்கொள்ளப் பட்டது. இந் நேர்காணலுக்கான ஒழுங்குகளைச் செய்துதந்த மலையக மக்கள் முன்னணித் தோழர்களுக்கு மனிதம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவும் தீவிர முயற்சியிலீடுபட்டுள்ளன. ஜப்பானும் தனது சந்தைப் பிரதேசப் பாதுகாப்பாக, இரண்டாவது உலக யுத்தத்தின்போது நடைமுறைப்படுத்த முயன்ற "பாரிய கிழக்காசிய கூட்டு முயற்சி வலயம்" என்ற திட்டத்தை மீண்டும் முன் தள்ளி நிற்கிறது.

ஜப்பானிய நவகாலனித்துவ நடவடிக்கைகள், ஆசியாவில் ஜப்பானை முதன்மைப்படுத்தும் பொருளாதார அபிவிருத்திகள் மூலம் புதிய சகாப்தத்தினுள் காலடியெடுத்து வைக்கின்றன. இந் நடவடிக்கையை AESI (ஆசியப் பிராந்திய பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்) என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இதன் மூலமாக ஜப்பானிய ஏகாதிபத்தியம் இரு நாடுகளுக்கிடையிலான மேலாண்மை என்றல்லாது, பிராந்திய ரீதியிலான மேலாண்மையைக் குறி வைக்கிறது.

AESI திட்டத்தின் மூலம் பிராந்திய பொருளாதார மேலாண்மையை எட்ட திட்டமிடும் ஜப்பான் NIC ஐ தனது இளநிலைப் பங்காளனாகவும், 'சோசலிச' நாடுகளான சீனா, மங்கோலியா, லாவோஸ், கம்பூச்சியா, வியட்நாம், வடகொரியா என்பனவற்றை தனது முதலாளித்துவ வலயத்தினுள்ளும் கொண்டுவர கங்கணம் கட்டுகிறது. முதலாளித்துவ நாடுகளிக்கிடையிலான போட்டி உக்கிரமடைய AESI நடவடிக்கைகளும் தீவிரம் பெற்றுக் கொண்டே போகும்.

**புதிய ஆசிய ஒழுங்கு நடவடிக்கைகள் ஆசியப் பிராந்தியத்தில் ஓர் புதிய இராணுவக் கட்டமைப்புக்குமான தேவையையும் ஏற்படுத்துகின்றது. இதில் அமெரிக்க–ஜப்பானிய இராணுவக் கூட்டு ஒரு முக்கியத்துவத்தை வகிக்கின்றது. அமெரிக்காவின் இராணுவக் கூட்டுக்களின் மூர்க்கமான பலம் உலக சோசலிச நாடுகளின் உடைவுக்கு ஒரு காரணமாக எடுத்துக் கொள்வோமேயானால், இதுபோன்ற இராணுவக் கூட்டு ஜப்பானிய–அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்க்கும் ஆசிய மக்களிற்கெதிராகவும் திருப்பி விடப்படுமென்பது நிச்சயமானதொன்று.**

இது வரைகாலமும் அமெரிக்காவில் தங்கியிருக்கும் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து நிறைவேற்றி வந்த நாடுகள், ஆசியாவில் ஜப்பானை முதன்மைப்படுத்தும் பொருளாதாரக் கொள்கைகளை வரவேற்காததது மட்டுமல்ல, இதை அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கையாகக் கூடப் பார்த்தனர். ஆனால் அமெரிக்கப் பொருளாதாரம் வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதால் முன்னைய தயக்கத்தை ஆசிய நாடுகள் பரிசீலிக்கத் தலைப்படுகின்றன. ஜப்பானிய முதன்மைப் பொருளாதாரக் கொள்கையை இந் நாடுகள் ஏற்றுக் கொள்வது மட்டுமன்றி, மலேசியாவின் மாகாத்தீர் போன்ற ஆசியத் தலைவர்கள் இதனை வெகு தீவிரமாக ஆதரித்து நடைமுறைப் படுத்தியும் வருகின்றனர். உலக யுத்தத்திற்கு முந்திய "பாரிய கிழக்காசிய கூட்டு முயற்சி வலயம்" திட்டத்துடன் ஒப்பிடுகையில் இன்றைய AESI அகண்ட பிரதேசத்தைத் தழுவி நிற்கின்றது.

அமெரிக்கா இதுவரை காலமும் தனது இராணுவ பொருளாதார பலத்தின் மூலம் 'உலகப் பொலிஸ்காரன்' வேலையை ஆசியாவிலும் பார்த்து வந்தது. ஆனால் இப்போ பொருளாதாரத்தில் பலமாக அடிபட்டுப் போய் தனது வலிமையை அமெரிக்கா இழந்து நிற்கின்றது. இது ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கிவிட்டது. ஏகாதிபத்திய மேலாதிக்கத்துள் உள்ள ஆசியப் பிராந்தியங்களைத் தக்க வைத்துக் கொள்வது, பிரதேச விரிவை செய்வது, தேவையேற்படின் இப் பிரதேசங்களை ஆயுத பலத்தால் பாதுகாப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எழும் சிக்கல்களை புதிதாக இப்போது ஜப்பான் முகங் கொடுக்க நேர்ந்துள்ளது.

ஜப்பான் தனது 'மூலோபாயமாக', AESI மூலம் பிராந்திய 'சமாதான நிலையை' ஏற்படுத்திக் கொள்ளலாமென கனவு காண்கிறது. இதுவே 'புதிய ஆசிய ஒழுங்காக' மாறிவரும் எனவும் எதிர்பார்க்கின்றது. ஏற்கனவே அமெரிக்கா முன்மொழிந்த 'புதிய உலக ஒழுங்கின்' ஒரு பகுதியாக இந்த 'புதிய ஆசிய ஒழுங்கு' சங்கமித்துக் கொள்ளும். சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னாலான ஜப்பானிய–அமெரிக்க உலகளாவிய ஏகாதிபத்தியக் கூட்டாக இது அமையும்.

'புதிய ஆசிய ஒழுங்கு' நடவடிக்கைகள் ஆசியப் பிராந்தியத்தில் ஓர் புதிய இராணுவக் கட்டமைப்புக்குமான தேவையையும் ஏற்படுத்துகின்றது. இதில் அமெரிக்க–ஜப்பானிய இராணுவக் கூட்டு ஒரு முக்கியத்துவத்தை வகிக்கின்றது. அமெரிக்காவின் இராணுவக் கூட்டுக்களின் மூர்க்கமான பலம் உலக 'சோசலிச' நாடுகளின் உடைவுக்கு ஒரு காரணமாக எடுத்துக் கொள்வோமேயானால், இதுபோன்ற இராணுவக் கூட்டு ஜப்பானிய–அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்க்கும் ஆசிய மக்களிற்கெதிராகவும் திருப்பி விடப்படுமென்பது நிச்சயமானதொன்று.

ஜப்பானிய அரசின் உயர் அதிகாரிகள், பெரும் தொழில் அதிபர்கள் ஆகியோர் பிராந்திய பாதுகாப்புப் பற்றியும் அதில் ஜப்பானிய இராணுவம் ஆசிய நாடுகளின் அரசாங்க இராணுவத்துடனான கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராய்ந்து வருவதுடன், தங்கள் பக்கம் ஆட்சேர்க்கும் படலத்திலும் ஏற்கனவே இறங்கியுமுள்ளனர். இவ்வாறான பிராந்தியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு அமைப்பானது NIC மற்றும் ASEAN என்பவற்றில் அங்கம் வகிக்கும் ஒடுக்கு முறை அரசால் நிச்சயமாக வரவேற்று ஏற்றுக் கொள்ளப்படுமென்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை.

### எதிர்கால அமைதிக்குப் பங்கம்

இவைகளெல்லாவற்றையும் கணக்கில் கொண்டு பார்க்கும் போது ஜப்பானிய இராணுவம் கம்பூச்சியாவிற்குள் நுழைந்து கொண்டது எதற்காகவென்பது வெளிச்சமாகிறது. அமைதி காக்கும் போர்வையில் ஜப்பானிய இராணுவம் தனது நவகாலனித்துவ நடவடிக்கையில் 'சோசலிச' கம்பூச்சியாவை ஆக்கிரமித்துக் கொள்கிறது.

இம் மாபெரும் பொருளாதார அரக்கனின் ராஜதந்திர நடவடிக்கை இப்போது தான் ஆரம்பித்துள்ளது. இதன் அரசியல் குள்ளத்தனங்கள் இனி போகப் போகத்தான் வெளிப்படும். 'அமைதி காக்கும்' பணியில் ஐ.நா சபையின் ஆசியுடன் புகுந்திருக்கும் ஜப்பான் ஆசியாவின் மீதான தனி மேலாதிக்கத்திற்கான முதலாவது அடியை எடுத்து வைத்துள்ளது.

**ஜப்பானை முதன்மைப்படுத்தும் ஆசிய நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகள் மூலம், ஜப்பானிய நவகாலனித்துவம் புதியதொரு சகாப்தத்தினுள் காலடி எடுத்து வைத்துள்ளது. இத் திட்டத்தின் மறுபெயர் ஆசியப் பிராந்திய பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்** *(Asian Economic Sphere Initiative - AESI)*

இதுவரை ஜப்பானின் இராணுவ நடவடிக்கைகள் சிறிது அடங்கிய நிலையிலேயே இருந்தது. தற்போதைய இவர்களது ராஜதந்திர நடவடிக்கைகள் இதுவரை இருந்த தேக்கநிலையை உடைத்தெறிந்து விட்டது. முன்னைய இவர்களது –குறிப்பாக போர்க்கால– நடவடிக்கைகள், அவற்றின் விளைவாக சர்வதேச ரீதியாக தார்மீக மட்டத்திலான தடைகள் எதுவுமே இராணுவத்தை கட்டியெழுப்பும் ஜப்பானியக் கரங்களை இனி தடுத்து நிறுத்தப் போவதில்லை. அடங்கிப் போயிருந்த இவர்களது பாரிய இராணுவ மயமாக்கம் இனி பீறிட்டு எழும்.

கம்பூச்சியாவிலுள்ள ஐ.நா நிறுவனத்தின் (UNTAC) தலைவரான அகாஷி, பிரதமர் மியாஸாவா விற்கு வேண்டுகோள் ஒன்றை மிக அவசரமாகவே விடுத்துள்ளார். ஒக்கினாவாவில் (Okinawa) அமைதிகாக்கும் பணிக்காக நிரந்தரமாக இராணுவ பயிற்சி மையமொன்றை அமைக்கக் கோருகிறது, இக் கோரிக்கை. ஆசியாவில் 'அமைதிப் பணியினில்' ஈடுபடவும், கொரிய குடாநாடு, பர்மா, காஷ்மீர் பிரதேசங்களை கண்காணிக்கவும் இது உதவியாக இருக்கும்.

ஐ.நா வின் அமைதிகாக்கும் பணியினூடாக, இதுவரை வழமையில் இருந்துவரும் அமெரிக்க–ஜப்பானிய பாதுகாப்பு ஒப்பந்தம் (AMPO) மற்றும் ஜப்பானிய–அமெரிக்க கூட்டு இராணுவ நடவடிக்கை என்ற கட்டமைப்புகளுக்கு வெளியேயும் தங்கள் படைபலத்தைப் பெருக்கிக் கொள்ளும் நல்லதொரு வாய்ப்பை ஜப்பான் பெறுகிறது.

அமெரிக்காவுடனான தனது இராணுவக் கூட்டை விட்டுக் கொடுக்காமலும், அதேவேளையில் அமெரிக்க இராணுவ பாதுகாப்புச் செலவினில் பங்கேற்பதன் மூலம் ஏகாதிபத்திய இராணுவத்தின் ஆசிய வெற்றிடத்தை நிரப்பும் பங்கையும் பணியினையும் ஜப்பான் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் மூலமாகத் தனது இராணுவக் கட்டமைப்பை சிறிது சிறிதாகப் பலப்படுத்திக் கொள்ளவும், தேவையேற்படின் முழுமையான இராணுவ பலத்தைச் சேகரித்துக் கொள்ளவும் ஜப்பான் முனைகிறது.

இந்தக் கணிப்பீடுகள் –மேற்கூறிய நடைமுறைகள்– எல்லாம் ஜப்பான் ஆசியப் பிராந்தியத்தின் அமைதிக்குச் சவாலாக அமைவதுடன், ஆசிய மக்களின் விடுதலைப் பாதையில் மாபெரும் தடையாகவும் நிமிர்ந்து நிற்கிறது என்பதை உணர்த்தி நிற்கின்றது.

**தமிழில் – தேவா**

(நன்றி :– Christian Worker, oct 93)

ODA - *Overseas Development Assistance*
ASEAN - *Association of Southeast Asian Nations*
NICs - *Newly Industrializing Countries (South Korea, Taiwan, Hong Kong and Singapore)*
EC - *European Community*
NAFTA - *North American Free Trade Association*
AESI - *Asian Economic Sphere Initiative*

**BERN இல்**
**தமிழ் நூல்நிலையம்**

இடம் : Zentrum 5
Effinger Strasse 54
3008 BERN

திறக்கும் நேரம் :
செவ்வாய் + வியாழன் – 18.00 –20.00
சனி – 14.00 – 170.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

